www.Padasalai.Net

# அலகு 2

பக்கம் எண்

(17-30)

## பனிரண்டாம் வகுப்பு

# தீவிர தேசியவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும்

www.Padasalai.Net

# கற்றல் கற்பித்தலின் நோக்கம்

- வங்காளத்தில் நடைபெற்ற சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் பற்றி அறிதல்.
- பிரிட்டிஷ் இந்திய அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளை புரிந்துகொள்வது.
- சூரத் பிளவு (1907) பற்றி அறிதல்.
- வங்காளத்தில் புரட்சிகர தேசியவாதத்தை பற்றிய அறிதல்
- தமிழகத்தில் நடைபெற்ற சுதேசி இயக்க போராட்டங்கள் பற்றிய நினைவலைகள்.
- வ.உ. சிதம்பரம்,வ.வே சுப்பிரமணியம்,சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதி ஆகியோரின் சுதேசிய செயல்பாடுகளை அறிதல்.

www.Padasalai.Net

# பாடத் தலைப்புகள்

1. 2.1 வங்கப்பிரிவினை (1905)
2. 2.2 பிரிவினை எதிர்ப்பு இயக்கம்
3. 2.3 புறக்கணித்தாலும் வங்காளத்தில் சுதேசி இயக்கமும் (1905-1911)
4. 2.4 தீவிர தேசியவாதம்
5. 2.5 புரட்சிகர தேசியவாதம்
6. 2.6 தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம்

www.Padasalai.Net

# கவனயீர்ப்பு

மிதவாத தேசியவாதிகள்




தீவிர தேசியவாதிகள்

www.Padasalai.Net

# தேசிய போராட்ட வீரர்களின் நிலை



மனு சமர்ப்பிப்பது



இறஞ்சுதல்



மன்றாடுதல்

www.Padasalai.Net

# முதன்முதலில் உத்வேகம் பெற்ற மக்களின் எழுச்சியும் மற்றும் இந்திய தேசிய காங்கிரசும்



பெண்கள் போராட்டம்



விவசாயிகள் போராட்டம்



தொழிலாளர்கள் போராட்டம்

www.Padasalai.Net

# வட்டார மொழிப் பத்திரிகையின் தேசியத் தன்மை

- தமிழ்நாட்டில்- சுதேசமித்திரன்
- மகாராஷ்டிராவில்- கேசரி
- வங்காளத்தில்- யுகந்தர்












www.Padasalai.Net

# ஆங்கிலேயரின் அடக்கு முறை சட்டங்கள்

1. 1907 பொதுக்கூட்டங்கள் சட்டம்.
2. 1908 வெடிமருந்து சட்டம்.
3. 1908 செய்தித்தாள் சட்டம், தூண்டுதல் குற்றச் சட்டம்.
4. 1910 இந்திய பத்திரிக்கைச் சட்டம்.

# 1.வங்கப்பிரிவினை(1905)

www.Padasalai.Net







கர்சன் பிரபு

www.Padasalai.Net

# • கர்சன் பிரபுவின் திட்டங்கள்

**ராலே கமிஷன்:**

1. 1904 பல்கலைக்கழக சட்டம்..
2. 1904இந்திய செய்தி பத்திரிக்கைகளில் அலுவலக ரகசிய சட்டம்.
3. 1905இல் வங்காள பிரிவு ஆணை.

அசாம் மக்கள் கர்சன் பிரபுவிடம் கடல்வழி அமைத்துத்தர கோரிக்கை வைத்தனர்



www.Padasalai.Net

# வங்கப்பிரிவினை ஆங்கிலேயர்களின் காரணமும் மக்களின் புரிதலும்

1. வங்காளத்திற்கு சுமையை குறைக்கவும்.
2. அசாமின் முன்னேற்றத்திற்கும்.
3. நிர்வாக வசதிக்காகவும்.

1. இந்து முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை உருவாக்குவதற்கும்.
2. முஸ்லிம் அரசுகளுக்கு சாதகமாக ஆங்கில அரசு செயல்பட்டது.
3. குடிமை பணியாளர்கள் வங்காளத்தை மொழியின் அடிப்படையில் பிரிப்பது எனும் கருத்து புறம் தள்ளப்பட்டது.

www.Padasalai.Net

# 2.2 பிரிவினை எதிர்ப்பு இயக்கம்










- சுரேந்திரநாத் பானர்ஜி கேகே மித்ரா பிரித்விஸ் சந்திர ரே – மனு சமர்ப்பிப்பது வேண்டுகோள் விடுப்பது.
- 1905 ஜூலை 19 இல் வங்கப் பிரிவினை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- 1905 ஜூலை 17 கல்கத்தாவில் கூட்ட முடிவில் ஆங்கில பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணித்தல் சுரேந்திரநாத் பானர்ஜி அறைகூவல் விடுத்தார்.

www.Padasalai.Net

# இயக்கத்தின் பரவல்






1. துர்கா பூஜைக்கு தடை.
2. 1905 அக்டோபர் 16 துக்க தினமாக கடைப்பிடிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது.
3. மாணவர்கள் அதிகமாக கலந்து கொண்டனர்.

# 2.3 புறக்கணித்தாலும் வங்காளத்தில் சுதேசி இயக்கமும் (1905-1911)

www.Padasalai.Net

- ஜி சுப்ரமணியம்
- ரவீந்திரநாத் தாகூர்
- கோபால கிருஷ்ண கோகலே
- எம்ஜி ரானடே
- மகாத்மா காந்தி











www.Padasalai.Net

# சுதேசி சிந்தனையின் பரிணாம வளர்ச்சி

'சுதேசி' என்பதன் பொருள் 'ஒருவரது சொந்த நாடு' என்பதாகும்.

- **1872** ல் எம்ஜி ரானடேவின் கருத்துப்படி: ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பொருளின் பயன்பாடு குறைவான மனநிறைவை கொடுத்த போதிலும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.
- **1920** ல் மகாத்மா காந்தி: சுதேசி என்பது ஒருவர் தனது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மட்டும் பயன்படுத்துவது என்பது மட்டுமல்ல.மேலும் சுதேசி என்பது நமக்குள் இருக்கும் ஆன்மபலம் அது வெகு தொலைவிலிருந்து கிடைப்பவற்றை ஒதுக்கி விட்டு நமக்கு அருகேயுள்ள சுற்றுப்புறத்தில் இருந்து கிடைக்கும் பயன்களையும் சேவைகளையும் பயன்படுத்தும் வண்ணம் இங்கு உள்ளவர்களால் தயார் செய்யப்படும் பொருட்களை மட்டுமே நாம் பயன்படுத்த வேண்டும்.
- அப்படியான தொழில்கள் எங்கு தேவைப் படுகின்றனவோ அங்கே அவர்கள் திறம்பட முழுமையாகவும் செயல்பட சேவைச் செய்ய வேண்டும்.

www.Padasalai.Net

# (அ) ஆக்கப்பூர்வமான சுதேசி

- ரவீந்திரநாத் தாகூர்: சுய உதவி (ஆத்ம சக்தி)
- கல்வியானது தாய்மொழியில் வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்தினார்.
- 'மேளாக்கள்' எனும் திருவிழாக்களை பயன்படுத்தி தனது சுய உதவிக் கருத்தை மக்களிடையே பரப்பினார்.
- இதனால் ஜவுளி, கைத்தறித்துணிகள், சோப்புகள், மண்பாண்டங்கள், தீப்பெட்டி, தொல்பொருட்கள் ஆகியவை சுதேசி விற்பனை நிலையங்கள் பெருகின .

www.Padasalai.Net

# விடிவெள்ளி கழகம்-சதீஷ் சந்திர முகர்ஜி

1. 1902 இல் சதீஷ் சந்திர முகர்ஜியால் வெள்ளி விடிவெள்ளி கழகம் (DAWN SOCIETY) நிறுவப்பட்டது.
2. 1905 நவம்பர் 5 இக்கழகம் கல்விக்காக தேசிய கழகமாக உருவாக்கப்பட்டது.
3. 1906இல் வங்காள தேசிய கல்லூரியும் வலியும் நிறுவப்பட்டன.
4. வேலைவாய்ப்புக்கான உத்தரவாதம் எதுவும் இல்லாததால் தோல்வி அடைந்தது.

www.Padasalai.Net

# (ஆ) சமிதிகள் –தொண்டர் படைகள்

1. உடற் பயிற்சி அளித்தல்.
2. அறநெறிகளை கற்றுக் கொடுத்தல்.
3. பஞ்சங்களின் போதும் நோய்களின் தாக்கத்தின் போதும் சேவை ஆற்றுதல்.
4. விழாக்காலங்களில் சுதேசி செய்தியை பரப்புரை செய்தல்.
5. உள்ளூர் அளவில் பள்ளிகளையும் நடுவர் நீதி மன்றங்களையும் உருவாக்குதல்.
6. அந்நியப் பொருட்களை புறக்கணித்தல்

www.Padasalai.Net

# (இ) சாத்வீக செயலற்ற எதிர்ப்பு(1906)

1. அந்நியப் பொருட்களை புறக்கணிப்பது.
2. அரசு பள்ளிகளையும் கல்லூரிகளையும் புறக்கணித்தல்.
3. பட்டங்களை துறந்து விடுதல்.
4. அரசு பணிகளை கைவிடுதல்.
5. ஆங்கிலேயரின் அடக்கு முறை தாங்க இயலாத அளவிற்கு சென்றால் ஆயுதப் போராட்டத்தை கைக்கொள்வது.

www.Padasalai.Net

# 2.4 தீவிரத் தேசியவாதம்

- லாலா லஜபதி ராய்-பால கங்காதர திலகர்-பிபின் சந்திர பால்
- மகாராஷ்டிரம்-வங்காளம்-பஞ்சாப்
- அரவிந்த் கோஷ்

சுவரில் தொங்கிய இந்திய வரைபடத்தை சுட்டிக்காட்டிய அரவிந்தர்.



"நீ அந்த வரைபடத்தை பார்க்கிறாயா? அது வரைபடம் அல்ல மாறாக பாரதமாதாவின் உருவப்படம் அதனுடைய நகரங்களும் மலைகளும் ஆறுகளும் காடுகளும் அவளுடைய உடலை உருவாகியுள்ளன. அவளுடைய குழந்தைகளே அவளுடைய பெரியதும் சிறியதுமான நரம்புகள் பாரதத்தை வாழ்கின்ற தாயாக நினைத்து கவனம் செலுத்தி ஒன்பது மடங்கு அதிக பக்தியுடன் அவளை வழிபடுவது" என பதிலுரைத்தார்.

www.Padasalai.Net

# முப்பெரும் தலைவர்கள்



www.Padasalai.Net

# சுயராஜ்யம் அல்லது அரசியல் சுதந்திரம்.

- பால கங்காதர திலகர்: நிர்வாகத்தின் மீதான இந்தியர்களின் கட்டுப்பாடு
- பிபின் சந்திர பால்: சுயராஜ்யம் என்பது அன்னியர்களின் ஆட்சியில் இருந்து முற்றிலுமாக விடுதலை அடைதல் என்பதாகும்.
- வங்காளம் பஞ்சாப் மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் மிதவாத தேசியவாதிகள் தீவிரவாத தேசியவாதிகளை குறைகூறி வந்தனர் ஆனால் தீவிர தேசியவாதிகள் மிதவாதிகளின் மேல் அனுதாபம் கொண்டனர்.

# சூரத் பிளவு 1907

www.Padasalai.Net

- 1907 இல் மிதவாத தேசியவாதிகள் மற்றும் தீவிர தேசியவாதிகள் என இரு பிரிவாக பிரிந்தது.
- காரணம்: 1906 இல் கொல்கத்தா மாநாடு நடைபெற்றது இதில் தாதாபாய் நவரோஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் அதனால் பிரிவு தடுக்கப்பட்டது.
- இதில் சுதேசி, புறக்கணிப்பு ,தேசிய கல்வி, சுயாட்சி ஆகிய நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.
- மாநாடு பூனே பின்பு மாற்றி சூரத் காங்கிரஸின் அடுத்த தலைவராக மிதவாதிகள் ராஜ் பிகாரி கோஷ் தேர்வு செய்தனர்.
- தீவிர தேசியவாதிகள் லாலா லஜபதி ராய் பெயரை முன்மொழிந்தனர்.
- மாநாடு குழப்பம் ஏற்பட்டு மிதவாதிகள் ஒரு குழுவாகும் தேசிய தீவிரவாதிகள் ஒரு குழுவாகும் சூரத் மாநாட்டில் பிளவு ஏற்பட்டது.

www.Padasalai.Net

# மேத்தா கங்கிரஸ்

- 1908ல் சென்னையில் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது.
- மாநாட்டில் மிதவாத தேசியவாதிகள் மட்டுமே கலந்து கொண்டனர்.
- இது மேத்தா காங்கிரஸ் என அழைக்கப்பட்டது.
- ஆங்கிலேயே அரசை எதிர்க்க இயலாத அமைப்பாக இருந்தது.

# 2.5 புரட்சிகர தேசியவாதம்

www.Padasalai.Net



- 1908ல் தீவிரத் தேசியவாதம் சரிவுற்று புரட்சிகர செயல்பாடுகள்
- புரட்சிகர செயல்பாடுகள் வன்முறையை நோக்கி என்ற மாற்றத்தை சுட்டிக்காட்டியது..
- ஆங்கிலேயர்களுக்கு இது வெகுஜனங்களின் எதிர்ப்பு என்று மாறி உயர்மட்ட சார்ந்தோரின் எதிர்ப்பு என்று மாறியது.
- 1870 களில் விவேகானந்தர் விளக்கியவாறு எஃகினாலான உடலையும் நரம்புகளையும் வளர்க்க அக்காரா எனப்படும் உடற்பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டன.
- பக்கிம் சந்திர சட்டர்ஜி இன் ஆனந்மத்(ஆனந்த மடம்) எனும் நாவல் குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இதனால் வந்தே மாதரம் சுதேசி இயக்கத்தின் கீதம் ஆயிற்று.

www.Padasalai.Net

# தேசிய பாடல்

வந்தே மாதரம்!

ஸுஜலாம் ஸுபலாம் மலயஜ ஸீதளாம்

ஸஸ்ய ஸ்யாமளாம் மாதரம் !

வந்தே மாதரம் !

ஸுப்ர ஜ்யோத்ஸ்னாம் புலகித யாமினீம்

புல்லகுஸுமித த்ருமதள சோபினீம்

ஸுஹாசினீம் ஸுமதுர பாஷினீம்

ஸுகதாம் வரதாம் மாதரம் !

வந்தே மாதரம் !




- பக்கிம் சந்திர சட்டர்ஜி

www.Padasalai.Net

# தனிநபர் வன்முறை எழுச்சிக்கு மூன்று காரணிகள் பங்களிப்புச் செய்தன.

1. அந்நிய அடக்குமுறைக்கு பொறுமை இழந்த இளைஞர்கள்.
2. இளைஞர்களை வெகுஜன போராட்டத்தில் ஈடுபடுவதில் தீவிரவாதிகள் தோல்வியடைந்தது.
3. தனிநபர் செயல்பாடுகள் வளர்வதற்கு காரணமாயிற்று.
4. இந்திய தறுகாண்மையை(வீரத்தை) மீட்டெடுக்கும் முயற்சியின் ஒரு பகுதி

# (அ) அலிப்பூர் குண்டு வெடிப்பு வழக்கு

www.Padasalai.Net

- வங்காளத்தில் 1902ல் பல ரகசிய சங்கங்கள் நிறுவப்பட்டது.
- கல்கத்தாவில் அனுசீலன் சமிதி : ஜதிந்தரநாத் பானர்ஜி ,அரவிந்த்கோஷின் சகோதரரான பரந்தர்குமார் கோஷ் ஆகியோரால் நிறுவப்பட்டது
- 1906 இல் டாக்கா அனுசீலன் சமிதி: புலின் பிகாரி தாஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- இதன் தொடர்ச்சியாக புரட்சிகர வார இதழான யுகந்தர் தொடங்கப்பெற்றதது.
- 1906 ரங்பூரில் முதல் சுதேசி கொள்ளையை நடத்தியது.
- 1906 இல் ஹேமசந்திரா கானுங்கோ ராணுவப் பயிற்சி பெற பாரிஸ் சென்றார்.
- 1908ல் அவர் நாடு திரும்பி மணிக்தல என்னும் இடத்தில் ஒரு பண்ணை வீட்டில் மதச்சார்பு பள்ளியோடு குண்டுகள் தயாரிப்பதற்கான ஒரு தொழில் கூடத்தையும் நிறுவினார்.
- பண்ணை விடுதியில் இந்து செவ்வியல்நூல் மற்றும் உலக புரட்சிகர குறித்த நூல்களையும் படித்து தன்னெழுச்சி பெற்றனர்.
- டக்ளஸ் கிங்ஸ்போர்டு ஆங்கில அதிகாரியை கொல்ல திட்டம் அங்கு தீட்டப்பட்டது.

www.Padasalai.Net

# டக்ளஸ் கிங் போர்டு சுதேசி கொலை செய்ய திட்டம்

இளம் புரட்சிவாதிகள்:

1. குதிராம் போஸ் (வயது 18); 2. பிரஃபுல்லா சாக்கி(19)
2. 1908 ஏப்ரல் 30 இல்தவறுதலாக ஒரு சாரட்டு வண்டியின் மீது குண்டை வீசினர்.
3. இந்த சம்பவத்தின்போது டக்ளஸ் கிங்ஸ் போர்டுக்குப் பதிலாக வேறு இரண்டு ஆங்கில பெண்கள் கொல்லப்பட்டனர்.

விளைவு:

- பிரஃபுல்லா சாக்கி தற்கொலை செய்து கொண்டார்.
- குதிராம் போஸ் கைது செய்யப்பட்டு பின்னர் கொலை குற்றத்திற்காக தூக்கிலிடப்பட்டார்.
- அரவிந்த் கோஷ் அவரின் சகோதரர் பரீந்தர் குமார் கோஷ் இவர்களுடன் 35 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.
- இவ்வழக்கை சித்தரஞ்சன் தாஸ் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடினார் இதுவே அலிப்பூர் குண்டு வெடிப்பு எனப்படுகிறது.

www.Padasalai.Net











குதிராம் போஸ்






www.Padasalai.Net

# (ஆ) ஆங்கிலேயரின் அடக்கு முறை

1. 1908 செய்தித்தாள் சட்டம்: இச்சட்டம் ஆங்கிலேய ஆட்சியை விமர்சிக்கும் எதனையும் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டது.(சொத்து பறிமுதல்)
2. 1910 இந்திய பத்திரிக்கைச் சட்டம் அர்ச்சகர்களும் வெளியிட்டாளர்களும் (பிணைத் தொகை கட்ட வேண்டும்)
3. விசாரணையின்றி கைது செய்யும் சட்டம்.



www.Padasalai.Net

# 2.6 தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம்

1. தமிழ்நாட்டில் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற சுதேசி இயக்கம் பெரும் கவனத்தையும் ஆதரவையும் பெற்றது.
2. தமிழ்நாட்டுக் காங்கிரசில் மிதவாத தேசியவாதிகளுக்கும் தீவிர தேசியவாதிகளுக்கும் இடையே ஆழமான பிரிவு இருந்தது.

www.Padasalai.Net

# (அ) வட்டார மொழி சொற்பொழிவு கலையின் வளர்ச்சி

இரண்டு இடங்களில் கூட்டம் நடைபெற்றன.

1. மெரினா கடற்கரை 2. மூர் மார்க்கெட்

- வங்கப் பிரிவினைக்கு எதிரான கூட்டங்கள் வழக்கமாக நடைபெறும் இதில் தலைவர்கள்,மாணவர்கள்,வழக்கறிஞர்கள்,தொழிலாளர்கள் ஆகியோர் கூடி வட்டார மொழியில் இருப்போரிடம் சொற்பொழிவாற்றினர்.
- **1905-1907** காலப்பகுதியில் காவல்துறை அறிக்கையில் மாணவர்கள் ஆபத்தானவர்கள் அவர்கள் ஐரோப்பியர்கள் மாணவர்களால் 'வந்தே மாதரம்' என்னும முழக்கத்துடன் வாழ்த்தபட்டனர்.
- **1907**இல் சென்னைக்கு வருகை தந்த பிபின் சந்திரபால் சென்னை மெரினா கடற்கரையில் ஆற்றிய உரைகள் பார்வையாளர்களிடையே பெரும் உத்வேகத்தையும் தமிழகம் முழுவதும் ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

www.Padasalai.Net

# (ஆ)வ.உ.சி யும் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியும் (SSNC)
# (SWADESHI STEAM NAVIGATION COMPANY)

S.S கலியா






S.S லாவோ

www.Padasalai.Net

1. 1906இல் வ உ சி சுதேசி நீராவி கப்பல் கம்பெனி எனும் கூட்டுப் பங்கு நிறுவனத்தை பதிவு செய்தார்.
2. மொத்த முதலீடு 10 லட்சம் இதனை 40 ஆயிரம் பங்குகளாக பிரித்து ஒரு பங்கு ரூபாய் 25 என பங்குகளை விற்றார்.
3. இந்தியர்களுக்கு, இலங்கை சேர்ந்தவர்களுக்கு மற்றும் ஆசிய நாடுகளை சேர்ந்தவர்களுக்கு மட்டும் விற்பனை செய்யப்பட்டது.
4. இந்தத் தொகையில் இரண்டு கப்பல்களை வாங்கினார்.

1. எஸ் எஸ் கலியா 2. எஸ்எஸ் லாவோ

1. சுதேச சுதேசி கப்பல் நிறுவனத்தின் வெற்றி குறித்து லோகமானிய திலகர் தன்னுடைய கேசரி,மராட்டா பத்திரிகையில் எழுதினார்.
2. அரவிந்த் கோஷம் கம்பெனியின் பங்கு விற்பனைக்கு உதவினார்.
3. பாண்டி துறையும் ஹாஜி பக்கீர் முகம்மது பெரிய பங்குதாரர்களில் இருவர் ஆவார்.
4. தொடக்கத்தில் இதனை ஆங்கிலேயர்கள் அலட்சியப்படுத்தினர் பின்பு இதனை எதிர்த்தனர்.

# (இ) கோரல் நூற்பாலை வேலைநிறுத்தம்

www.Padasalai.Net

- 1907 வ உ சி யும் சுப்பிரமணிய சிவாவும் தூத்துக்குடி கடற்கரையில் சுதேசி இயக்கத்தை பற்றி தினந்தோறும் பொதுக்கூட்டங்களில் பேசினார்.
- மக்களுக்கு சுதேசி குறித்தும் புறக்கணித்தல் பற்றியும் கற்றுக் கொடுத்தனர் ஆயிரம் கணக்கான மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.
- 1908ல் கோரல் மில் தொழிலாளர்களின் படுமோசமான வேலை வாழ்க்கைச் சூழல் இவை வ.உ.சி, சிவா ஆகியோரின் கவனத்தை கவர்ந்தது.
- இவர்கள் இருவரும் தொழிலாளர்களிடம் உரையாற்றினார்கள் அவர்களால் தூண்டப் பெற்று கோரல் நூற்பாலை தொழிலாளர்கள் 1908 இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
- தேசிய செய்தி பத்திரிகைகளில் நூற்பாலை தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை முழுமையாக ஆதரித்தன.
- உரிமையாளர்கள் இதற்கு அசைந்து கொடுக்கவில்லை. இதனால் தூத்துக்குடியில் கூட்டம் கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டது.
- முடிவில் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.
- இந்த வெற்றி பத்திரிகைகள், சுதேசி தலைவர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

www.Padasalai.Net

- நூற்பாலை



www.Padasalai.Net

# (ஈ) சுப்பிரமணிய பாரதி: கவிஞர் மற்றும் தேசியவாதி

- முதன்முதலில் தேசியவாத செய்திகளை செய்திப் பத்திரிகையை பயன்படுத்தி பரப்புரை செய்தவர் ஜி சுப்பிரமணியம் அவர்கள்.
- ஜி சுப்ரமணியம் பத்திரிகைகள்: 1. தி இந்து 2.சுதேசமித்திரன்.
- வ.உ.சி. தூத்துக்குடி உரைகள் பற்றி சுதேசமித்திரனில் வெளியிட்டார்.
- ஒரு புதிய விடியல் ஆக 1904 இல் சுப்பிரமணிய பாரதி சுதேசமித்திரன் பத்திரிக்கையின் துணை ஆசிரியராக பணியமர்த்தப்பட்டார் .
- சக்கரவர்த்தினி எனும் மாத இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். இது பெண்களின் மேம்பாட்டிற்கானது.






www.Padasalai.Net

- இரு நிகழ்வுகள்:
- சுப்பிரமணிய பாரதியின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின.
- 1. 1905 சகோதரி நிவேதிதாவை சந்தித்தது.

  2. ஆங்கிலேயே ஆட்சியை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து காங்கிரசுக்குள் நிலவிய கருத்து குழப்பம்.
- பாரதி தீவிர தேசியவாதிகளின் மீது அவர் அதிகம் ஆர்வம் கொண்டிருந்தார். இதனால் 1907இல் திலகர் மீது ஆர்வமும் பற்றும் கொண்டதால் TENETS OF NEW PART எனும் நூலை பாரதி தமிழில் மொழியாக்கம் செய்தார்.
- 1807 இல் சூரத் சென்று வந்த பயணம் மற்றும் சென்னை மாகாண தீவிர தேசியவாதிகள் குறித்தும் சிறு புத்தகம் ஒன்றை வெளியிட்டார்.
- இந்தியா என்ற வார இதழ் ஆசிரியராக பணியாற்றினார் இது தீவிர தேசியவாதிகளின் குரலாக மாறியது.

www.Padasalai.Net

# (உ) வா உ சி சுப்பிரமணிய சிவா கைதும் சிறைவாசம்



1. **1907 மார்ச் 9** ஆறு மாதம் சிறை தண்டனைக்கு பிறகு பிபின் சந்திர பால் விடுதலை செய்யப்பட்டார்.
2. இந்த நாளை சுதேசி சுதேசி இயக்க தலைவர்கள் சுதேசி தினமாக திருநெல்வேலியில் கொண்டாட முடிவு செய்தனர்.
3. ஆங்கிலேயர் அரசு இதனை மறுத்தது அதனை மீறி வ உ சி சுப்பிரமணிய சிவா பத்மநாபர் ஆகியோர் செயல்பட்டனர்.
4. 1908 மார்ச் 12 தேச துரோக குற்றத்திற்காக கைது செய்யப்பட்டனர்.

விளைவு: கைது செய்ததை எதிர்த்து உள்ளூர் மக்கள் நூற்பாலை தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

- மேலும் கடையடைப்பு மற்றும் திருநெல்வேலியில் நகரசபை கூட்டமும் காவல்நிலையம் தீ வைக்கப்பட்டன.
- காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.




கைது

- 1908 ஜூலை 7 வ உ சி யும் **சுப்பிரமணிய** சிவாவும் தேசத் துரோகக் குற்றத்திற்காக கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர்.
- வ.உ.சி சுப்பிரமணிய சிவாவுக்கு உடந்தையாக இருந்ததற்கு ஒரு ஆயுள் தண்டனையும் அரசை எதிர்த்து பேசிய குற்றத்திற்கு மேலும் ஒரு ஆயுள் தண்டனை விதித்தது (மொத்தம் **40** ஆண்டுகள்)
- சுப்பிரமணிய சிவாவுக்கு பத்து ஆண்டுகள் நாடு கடத்துதல் தண்டனை.

# (ஊ) ஆஷ் படுகொலை

www.Padasalai.Net

- 1880 திருவாங்கூர் பகுதியில் வாஞ்சிநாதன் பிறந்தார்.
- புனலூர் வனத்துறையில் காவலராக பணியாற்றினார்.
- பாரதமாதா புரட்சிகர தேசியக் குழுவில் ஒரு உறுப்பினர் ஆவார்.
- திருநெல்வேலியில் நடந்த நிகழ்வுக்கு பழிவாங்குவதற்கு ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டது.
- வாஞ்சிநாதனுக்கு கைத் துப்பாக்கியை பயன்படுத்தும் பயிற்சியை வ.வே சுப்பிரமணியம் பாண்டிச்சேரியில் வழங்கினார்
- 1911 ஜூன் மாதம் மணியாச்சி ரயில் நிலையத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ராபர்ட் ஆஷ்யை வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்றார்.
- பின்பு வாஞ்சிநாதன் அதே துப்பாக்கியால் தன்னை சுட்டுக்கொண்டார்.
- படுகொலையின் பின் விசாரணையின்போது இந்த படுகொலைக்கு பாண்டிச்சேரியில் தலைமறைவாக இருந்த வ.வே. சுப்பிரமணியரும் ஏனையோரும் இணைந்து செயல்பட்டதை ஆங்கில அரசு நிரூபித்தது.
- தமிழ்நாட்டில் சுதேசிய வேகம் குறைந்து 1916 இல் தன்னாட்சி இயக்கத்தின் மூலம் புத்துயிர் பெற்றது.

www.Padasalai.Net

# திருநெல்வேலி மணியாச்சி இரயில் நிலையம்


ராபர்ட் ஆஷ்






www.Padasalai.Net

# அனைவருக்கும் நன்றி

கா.பழனிவேல், (முதுகலை ஆசிரியர் வரலாறு)

அரசினர் மேல்நிலைப்பள்ளி,

மழவந்தங்கல்.